மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, திரு. டி. மணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

23--

பட்டா

***216—திரு. டி. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமம், வலியஏலா விவசாயிகளுக்குத் தாங்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளுக்குப் பட்டா வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமத்தில் உள்ள வலியஏலா என்னுமிடம் கிராமக் கணக்குகளின்படி நில அளவை செய்யப்படாத பாதுகாக்கப்பட்ட காடுகளாகும் (Reserve Forest). எனவே, இவ்விடத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டு நிலம் என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது 1982-க்குப் பின்னால். அந்த நிலத்தில் விவசாயிகள் உள்ளே நுழைந்தது 1946-ல். 1946-க்கும் 1982-க்கும் இடையில் அவர்களிடமிருந்து நிலவரி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. எனவேதான், வனத் துறைக்கு அதில் சம்பந்தம் இல்லை என்ற முறையில் தான் அவர்களுக்குப் பட்டா வழங்கவேண்டும். தவறாக ஒரு இன மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. அந்தவகையில் அந்த விவசாயிகளுக்குப் பட்டா வழங்கவேண்டும். அவர்களுக்குச் செல்வதற்கான பாதையில்லை. மின்சாரம் இல்லை. பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. கடந்த 5 ஆண்டு காலமாக இந்த மாமன்றத்திலே இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கின்றேன். 1980-ஆம் ஆண்டிலிருந்து 1984 வரையிலும் இந்த மாமன்றத்திலே இந்த விவகாரத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். எனவேதான், இந்த முறையில் வனம் என்று சொல்வதை மாற்றி, அதற்குப் பதிலாக அவர்களுக்கு முழுமையான பட்டா வழங்குகின்ற நடவடிக்கைக்கு அரசு மறுபரிசீலனை

செய்து நடவடிக்கையினை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட இடம் வனத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற புறம்போக்குக் காடுகளாகும். அதன் அடிப்படையில் அதற்கு மின் வசதி இல்லை. அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. இதனுடைய முடிவு கொள்கை அளவிலான முடிவாக இருப்பதால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு வட்டம், அதேபோன்று அதற்கு அருகாமையிலேயிருக்கின்ற கற்குளம் வட்டம் என்ற இடங்களிலேயெல்லாம், இருக்கின்ற நிலங்களிலே, ஏற்கெனவே வருவாய்த் துறை அவர்களுக்கு 'B' Memo கொடுத்து, பல வருடங்களாக அவர்கள் அங்கே தங்கி விவசாயம் செய்தும் மற்றும் பல தொழில்கள் நடத்திக்கொண்டும் இருக்கின்ற இடங்களிலே சமீபகாலமாக, வனத் துறையைச் சார்ந்தவர்கள், அதனை அவர்களுடைய இடம் என்று சொல்லி உள்ளே வந்து அங்கே தங்கியிருக்கிற மக்களுக்கு அடிப்படை வசதிகள்கூடக் கொடுப்பதற்கு தகராறு செய்கிற சூழ்நிலை குறித்து அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? குடிதண்ணீர், மின்சார வசதி செய்து கொடுப்பதற்குக்கூட மறுக்கப்படுகிறது. இது வனத் துறைக்கு எப்படி சொந்தமாகின்றது என்பதைக்கூட அவர்கள் விளக்குவதில்லை. நீதிமன்றம்கூட அங்கே தங்கியிருக்கின்றவர்களுக்கு சொந்தம் என்கின்ற முறையிலே தீர்ப்பு கொடுத்ததற்குப் பிறகும், வனத் துறை இப்படி ஆக்கிரமித்து தகராறு செய்வதை நிறுத்திக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும் தேவைப்பட்டால் இதுசம்பந்தமாக ஒரு குழுவை, அதாவது அதிகாரிகளுடைய ஒரு குழுவை அமைத்து, revenue-க்கு சொந்தமான இடமா அல்லது வனத்துறையினுடைய இடமா என்பதைப்பற்றி முடிவு செய்து அதற்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்துவதற்கு, அவர்களுடைய வாழ்க்கையிலே வனத்துறை தகராறு செய்யாமல் இருப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விடை அளித்தது, குடியிருப்பு பகுதிகளுக்குண்டான பட்டா வழங்குவது குறித்ததான கோரிக்கையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருவது விவசாய நிலங்களைப் பற்றிய குறிப்பாகும். அதற்குண்டான தனி வினாவை அவர்கள் போடுவார்களேயானால், அதற்கு நான் விடையளிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அதாவது, அங்கே தங்கி இருக்கின்றவர்களுக்கு Revenue Department–லிருந்து B–Memo கொடுக்கப் பட்டிருக்கின்றது. அதனாலேதான், அவர்களுடைய உரிமை அங்கே வருகிறது. மேலும், அவர்கள் பட்டாவிற்காக மனுக்களும் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பட்டாவிற்கான மனுக்கள் பெண்டிங்கிலே இருக்கின்ற நேரத்திலே வனத் துறை அங்கே வந்து அவர்களுடைய வாழ்க்கையை சின்னாபின்னமாக்குகின்ற நிலைகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு ரெவின்யூ துறை தகுந்த நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்குமா ?...(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன், ஏற்கெனவே அமைச்சர் இதுபற்றிச் சொன்னார். இதுசம்பந்தமாக முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போவேன் என்று சொல்லியிருக்கிறார். அதனாலே, பிரச்சினையை விட்டுவிடுங்கள்.

வினா எண் 24, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

24–

இரட்டைச் சாலை

***6830–திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூரிலிருந்து பார்த்திபனூர் வரை செல்லும் மாநில நெடுஞ்சாலை, திருவில்லிப்புத்தூர், சிவகாசி, விருதுநகர் மற்றும் சாத்தூர் ஆகிய தொகுதிகளில் இரட்டைச் சாலையாகவுள்ள அச்சாலை அருப்புக்கோட்டை தொகுதியில் மட்டும் இரட்டைச் சாலையாக ஆக்கப்படாமல் உள்ளது அரசிற்குத் தெரியுமா?